**செ.வெ.எண்: 258** **நாள்: 19.04.2018**

## <u>பத்திரிக்கை செய்தி</u>

## பல்நோக்கு வளர்ச்சி திட்டம் மூலம் அடிப்படை உட்கட்டமைப்பை மேம்படுத்துத்தல் (Mutli Sectoral Development Programme )

பின்தங்கிய சிறுபான்மையின சமூகத்தினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் குடிநீர் வசதி, சாலை வசதிகள், கழிவறை வசதி, கான்கீரிட் வீடுகள் அமைத்தல் மின்சார வசதி ஏற்படுத்துதல், திறன் வளர்ப்பு பயிற்சிகள் பின்தங்கிய சிறுபான்மையினர் வசிக்கும் பகுதிகளில் மேம்படுத்தப்படும்.

**தகுதிகள்:** இத்திட்டம் மக்கட்தொகை கணக்கெடுப்பின் (2011) படி அந்தந்த மாவட்டங்களில் சிறுபான்மையினர் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புறங்களில் 25 சதவீதத்திற்கு குறையாமலும் கிராமப்புறங்களில் 50 சதவீதத்திற்கு அதிகமாகவும் இருத்தல் வேண்டும்.

**பரிந்துரை செய்ய வேண்டிய அலுவலர்கள்:**

சார் ஆட்சியர், கோட்டாட்சியர்கள், அனைத்து வட்டாட்சியர்கள் மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்கள் பகுதியில் சிறுபான்மையின சமூகத்தினர் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டங்களை மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையிலான குழுவின் கருத்துருக்களை பரிசீலித்து சென்னை சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அதனை மாநில அரசு பரிசீலித்து மைய அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்படும். மேலும் இத்திட்டத்தின் கீழ் தகுதியான சிறுபான்மையின சமூகத்தினர் பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி